உ

ஆதிபகவன் துணை.

# தீண்டாமை
# ஒழிப்புச் சிந்து.

இஃது

பெருநாழி என்னும் பழைசைநகர்

ஸ்ரீமான்

வெ. ஆ. குமரய்ய நாடாரவர்களால்

இயற்றப்பெற்றது

விருதுநகர், தேசாபிமானத்திற் சிறந்த

நாடார்கள் திரவிய சகாயத்தால்

வெளியிடப்பட்டது.

உண்மைவிளக்கம் பிரஸ்,

விருதுநகர்.

1934.

உ

சுயப்பிரமமே துணை.

# தீண்டாமை யொழிப்புச் சிந்து.

தூண்டாமை பெற்று நின்ற சுடர்விளக் கினைய ஞானம்
பூண்டாமை யடக்கத் துள்ள புலன்பெறு சாந்தி வேண்டும்
தீண்டாமை யொழிப்புச் சிந்து செப்பிட வெவையு வேண்டல்
வேண்டாமை யில்லாச் சோதி விமலனை வணக்கம் செய்வாம்.

## நூல்—பல்லவி.

சாதியின் பேதம்—நாமிந்த நாட்டில்—தவிர்ப்பது நீதம்

## அனுபல்லவி.

ஆதி மனிதர்நன் னீதியை மாறுசெய்
மீதிழி வென்றுபல் வாதங்கள் செய்திடும் (சாதி

## சரணங்கள்.

1. ஏகன் அமைப்பில் எழுந்துள தோற்றமே
எழு வகை யிரா யிலங்கிய தூற்றமே
ஆறு மவற்றினில் மானிடம் ஏற்றமே
ஆருஞ் சொல்வாரிது கேண்மி னென்மாற்றமே (சாதி
மரஞ்செடி காடு—ஆதிமனிதர்கள்—திரிந்துள நாடு

2. பண்டுள்ள மனிதர்கள் கூடியு கூட்டமே
பாவைய ராடவர் பெருகிய ஈட்டமே
உண்டு உறங்கிட வீடு விளைந்தனர்
ஊரெனுஞ் சேர்க்கையா ங்கங்கு நுழைந்தனர். (சாதி
காவல்செய் யென்றார்—ஒருவனை யொருவனை—ஏவல்செய் யென்றார்

3. தன்னுமிடப் பொருள் மாறித் தரும்படி
தூரப் பொருள்களைக் கொண்டு வரும்படி
உன்னி யொருவனை யத்துறை போக்கினர்
ஒருவனைத் தெய்வப் பணிவழி யாக்கினர் (சாதி
இத்தொழில் நான்கே—எவருமந்நாள்—ஒத்துள பாங்கே

4. இம்முறை தன்னி லிருந்தார் முந்நாள்களில்
ஏற்றத்தாழ் வென்பதே யில்லையந் நாள்களில்
அம்முறை யந்தண னரசு வணிகனும்
ஆன தொழில்புரி கின்ற பணியனும் (சாதி
சாதியும் நான்கே—ஐந்தெனுஞ் சொல்—சாற்றுதல் தீங்கே

5. புராதன நூற்கள் கருத்தது மின்னதே
புயல்வண்ணன் கீதையிற் சொன்னது மின்னதே
திராவிட நாட்டின் வழக்கமு மின்னதே
சித்தர் முனிவர் முழக்கமு மின்னதே (சாதி
பேதங்களில்லை—உயர்வு தாழ்வெனும்—நாதங்களில்லை

6. உற்றவருணங்கள் நான்கினும் வந்தனர்
ஓங்குதவத்து ரிஷிகளாய் நின்றனர்
கற்றறியா திழிவாம்நடை யுற்றனர்
கசடரிழிஞரெனும் பெயர் பெற்றனர் சாதி

7. சரித்திரகாலத்துக் கெட்டாத காலத்தார்
சதுர் மறையரவையும் தந்துள மூலத்தார்
விரித்துள நூல்களில் ஞாயந்தழைந்தது
விகற்பவகை யெல்லாம் பின்புநுழைந்தது
பிரிந்ததுசாதி—அதற்கேற்க—விரிந்தது நீதி

8. உயர்வுக்குந்தாழ்வுக்கும் ஒழுக்கமே காரணம்
ஒழுக்க மெவ்வினத்திலு முள்ளதுபூரணம்
மயல்மது வூனுகர் மறையன் மறையனும்
மறையெலாமோதிலும் பறையன் பறையனும்
இதுவென்ன ஞாயம்—இதுகாலத்தினில்—ஏற்குமோசாயம்

9. பத்திபுகட்டப் பாராளத் தொழில்செய
பாங்கான முறையினில் வைத்தனருலகுய
வித்தகரென்றுநம் காந்தியுரைத்தனர்
வியாக்யானமாய்ப்பலர் சொற்கணிரைத்தனர்

**மார்கழிமாதம் திருவாதிரை என்றவண்ணம்.**

ஆதனூரார் தொண்டரிலொருவரவருஞ் சாம்பாரே
அம்பலமேறிப் பார்ப்பனர்யார்க்கு மதிபானாரே
காவிரியாற்றில் திருப்பாணாழ்வார் கல்லெறிபட்டாரே
கல்லெறி பார்ப்பனர் தோளிற்சுமந்து கண்ணன்முன்விட்டாரே
காரணநாவரசுஞ் செழுத்தின்னிலே கண்டுநின்றாரே
சபிலேயுரித்துழல் புலேயரும் நாம்பணி கடவுளென்றாரே
இராமானுஷர் பகவான் திருவருளெய்தப் பெற்றாரே
எவரும் ஹரிஜனம் ஆலயவணக்கத்தியல்பு பெற்றாரே
என்றாரந்நாள் சாதியின்தீட்டை யீசன் சொன்னாரோ
ஏகுவீர்தூர என்றுவிழாவில் எவருஞ்சொன்னாரோ
ஆங்கிலர் முதலாம் அந்நியநாட்டினர் யாரும் புகுவாரே
அந்நியநாட்டினர் சட்டைக ளணிந்தேயணியாய்ப் புகுவாரே
பன்றிகள் கழுதை நாய்கள் நரிகள் பரிந்துலாவுமே
பருந்துகழுகு ஆந்தைகள் காகம் பரந்துலாவுமே.
ஐந்தறிவுடைய மாக்கள் புகுவதாகு மென்கின்றீர்
ஆறறிவுடைய மனிதர்கள் புகுவதாகா தென்கின்றீர்
திருடன்வஞ்சன் குடியன்போனல் தீட்டோவங்கில்லே
செப்பமனத்தா னொருவன் போனல் சேருமாங்கெதால்லே
ஈதறியாமை யென்பதைபானு மிசைக்கவேண்டுமோ
எந்தநாட்டினு மிந்தவிகற்ப மிருக்கக்காண்டுமோ
ஏறுங்கப்பல் யந்திரவண்டியில் எவருமொன்றல்லோ

இலங்கைபர்மா நாடுகள் சென்றோரெவரு மொன்றல்லோ
இந்த விகற்பம் போக்கக்காந்தி யெங்குந்திரிந்துளார்
ஈவே ராமசாமிப்பெரியார்முன்பே துணிந்துளார்

## ஆனந்தக்களிப்பு

ஆலயங்கட்டினர் பண்டு — தினம்
அன்பர்பணி வதைக்கண்ணாலே கண்டு
மாலானதெய்வப் பேர்ச் — சிலைகள் எல்லாம்
வல்லபிரமமே தங்கருள் நிலைகள்
பிரமமாந்தெய்வத்திற்கில்லை — சாதி
பேதங்களென்றுநாம் சொல்கிறதொல்லை
வரந்தருதெய்வத்தின் மாட்சி — கண்டு
வரப்பெறுவோரைத்தடுப்பது எச்சி
ஆதிவேதங்களிற் கூறு — விதி
ஆகமத்துள்ளவை நாட்டினில் ஏறு
நீதியொழுக்கங்கள் காட்ட — முறை
நிகழ்த்தினார் நெறிநின்றோர்க்கருளினையூட்ட
சீமைச்சாராயங்கள் குடிப்பார் — சுவாமி
தெரிசனஞ்செய்வோரைக்கைகளாலடிப்பார்
மாமிசவர்க்கங்கள் புசிப்பார் — இங்கே
வாராதீரெனப்பரிகசிப்பார்
தாசிகள் நடனஞ் செய்சாலை — அங்கே
தனித்துக்காண்போரிடம் புரிவர்கள்லீலை
மோசமிவ்வகையெலாம் போக்கி — ஞான
மூர்த்தியைநல்லகக்கண்களால் நோக்கி
சாதிப்பிணக்கெலாம் நீக்கி — ஏக
ஜனமெனுஞ்சன்மார்க்கநெறியினையாக்கி
ஆதிகடவுளைத் தொழுவோம் — கரம்
அன்பாகக்கோர்த்திங்குழுதன்மையாயெழுவோம்
தீண்டாமையென்பது தப்பு — என்று
திருவுளம்பற்றினர் காந்திநீ யொப்பு
வேண்டுஞ்சுயமரியாதை — தேடும்
வீரர் பிரசாரபோதமுமீதே

## நொண்டிச் சிந்து

செகமெலாம் ஒளிபரவ — உதித்தது
செழுங்காந்தியென்றுலகு தொழுங்காந்தி
மகத்துவப் பிறப்பதனால் — கூறினர்கள்
மகாத்துமா வென்று விரிசகாப்தநாமம்
தேசவிடுதலைக்காய் — அவர்செய்த
சேவைகளையாவரே யோர் கோர்வைசெய்வார்
வாசஞ்சிறையிடமாய்க் — தம்முடைய

# தீண்டாமை யொழிப்புச் சிந்து

172149

வாணாள்கழிப்பர் தவங்காணு முறையில் சதுரங்கம்
விலங்கார் கரத்துடனே
விளையாடுபவரெனத்தளர்தலின்றி இட்டபல
தலங்காவல் புரிபவர்கள்
சட்டங்களினின்றுரியதிட்டஞ் செய்வார் ஜனங்கள் பின்
பல்லாயிரக்கணக்காய்
பற்றச்சிறைக்களத்திலுற்று நின்றா இங்கிருந்து
வல்லாரழைத்தபடி
வட்டமேஜைமகாநாடு வட்டஞ்சேர்ந்தார் மேரியம்மாள்
ஆனநம்சக்ரவர்த்தி
அழைக்கும் விருந்திலன்பு தழைக்கவுண்டார் உரியவை
கோனில்லைபாருதப்படி
கொடுத்திடவேண்டுமென அடுத்துக்கேட்டார்
ஆளும் பொறுப்புடையார் கேட்டதுவை இங்குவந்தார்
அங்குமறுத்துவிட
ஏழைந்துகோடி ஜனம் இதில்தீண்டா சிந்தைசெய்தார்
இந்தியனெனுமொழியைச்

## நல்வாக்குநீகொடடி என்ற வண்ணம்

புறப்பட்டார் காந்திமகான் தீண்டாப் புன்மையினைநீக்கிவிட
திறப்பட்டார் தங்களுடன பலபல தேசங்கள்சுற்றுகிறார்
இமையங்குமரிவரை புவி எங்கணுஞ்சுற்றியலோ
அமைவாஞ் சனங்களிடைநின்று அருள்உபதேசஞ்செய்வார்
அரியெனும் ஆதிதேவன் பதம்பணி அரிசனமாகுமென்றார்
உரிமையித்தேசமதில் நமக்கு உள்ளதெலாம் உண்டுமென்றார்

பல்லவி

சுத்தத்தை நாடிடுவீர் ஹரிஜனங்காள் நீவிர் பரி
சுத்தத்தை நாடிடுவீர்

அநு பல்லவி

வித்தையும் புத்தியுநற் பத்தியுஞ்சித்தியுமெய்
சத்தையுநித்தியசு கத்தையுநித்தமருள் (சுத்

## சரணங்கள்.

1. கள்ளுச்சாருயவகை கண்களாற்பார்க்கவேண்டாம்
கபிலைபிறைச்சியினைக் கருதிப்புசிக்கவேண்டாம்
துள்ளித்திரிந்துபல தோஷங்கள் செய்யவேண்டாம்
தொழிலையிழிவாயெண்ணித தூரத்தேநிற்கவேண்டாம்
2. பாழாமசுத்தவுடைப் பற்றினை விட்டிடுவீர்
பகவானின்பக்தியெனும் பண்பையே தொட்டிடுவீர்
சூழுந்தேசியசேவைத் தொண்டுடன் டட்டிடுவீர்
சுததகைதருடைகள் தொண்டு ரகட்டிடுவீர்

# தீண்டாமை யொழிப்புச் சிந்து

## எங்கே யிருந்தாலும் என்றவண்ணம்

### சரணங்கள்,

காந்தியடிவந்தருளுங்காட்சியே
கண்ணியமாருதகாட்சி புண்ணியசொரூபாவர்

### அநுபல்லவி.

ஈந்தியநாட்டில் தென்பால் இறுதிகடல் வரைக்கும்
போந்தபயணத்திரும்பி பொங்கிய விருதுநகர் [காந்

### சரணங்கள்.

ஆயிரத்தோடொன்பது நூறதில்மூன்று பத்து நாலாம்
ஆனவாண்டுமுதல் மாதம் இந்து இந்தாந்தேதிதனில்
தூயநகர்மாந்தரெலாஞ் சொல்லவொண்ணு ஆவலுடன்
சோதிமுகங்கண்டு கொளத் தோன்றியெதிர்பார்த்திருக்க (கா

### வேறு பல்லவி.

### பல்லவி.

வானமழைநீர் பொழிய நின்றோர்
வண்ணவுடை நீர் வழிய நண்ணுசெந்

### கண்ணிகள்

தேனன காந்தியடி திருவுருப்பார்க்க
சேருங்கனஜனங்கள் எங்கணும் போர்க்க
மானார்திரளை யொருகோட்டையிற்சேர்க்க
வந்துகவிந்துமுகில் மின்னியங்குகார்க்க (வா
பல்லாயிரக்கணக்காய் வருஞ்சனக்கூட்டம்
பாணனமேடையினில் வைத்தனர் நாட்டம்
சொல்லாடிச் சொல்லாடிச் செய்வரார்ப்பாட்டம்
சொரிந்துவிடாது வரும்பலபலபாட்டம் வா
கருப்புக்கொடியு மொருபக்கம் பறந்த
காரின்ம்பேரிசைந்து வண்டில் விரைந்த
இருப்புக்கொள்ளாதபடிவெள்ளம் நிறைந்த
எந்துங்குடையினங்க ளெங்குஞ் சிறந்த (வா

இராகம்—ஆரபி. தாளம் – ஆதி.

பல்லவி.

இப்படி ஜனமிருக்கும்போது—அங்கு
இரவியு மறைந்திட நற் சாது
அப்புமழை நேரநேரம் தப்பிவண்டியில் வருவார் (இப்

அநுபல்லவி.

செப்புசிவ காசிநகர்ச் செல்வரெல்லாங் கண்டுதொழ
ஒப்பியே விருதுநகர் உத்தமர்பால் வந்திடுவார் (இப்

சரணங்கள்.

1. நாலுமயில் தூரமதி லுள்ளமண் மேடு
நல்லவர்செய் கட்டிடங்க ளிப்பாங்குள தென்றோடு
சிலஅபி மானியர்கள் சென் றுஎதிர் கொண்டார்
சீதமழை யூடுவந்து மாநகரங் கண்டார் (இப்

2. வீதியெலா மாசனங்கள் பொங்குபெருங் கூட்டம்
விடிந்து வருவாரெனவே சிற்சிலர்கள் நாட்டம்
ஓதுபொருள் அன்பர்கா அன்புடனே பெற்றார்
ஓர்நொடியில் ஊர்கடந்து மங்கலவூ ருற்றார் (இப்

விருத்தம்.

கோசலை நாட்டி லுள்ள குடியெல்லாங் காத்து நிற்க
வாசக மின்றி ராமன் மறைந்தங்கு சென்ற தென்ன
தேசுலா நகர மாந்தர் தெரிசனை விரும்பி நிற்க
மாசிலா வாய்மைக் காந்தி மழையினுல் கடந்து சென்றார்.

தேயிலைத் தோட்டத்திலே—என்ற வண்ணம்.

காந்தி யடிகளவர்—நின்றோர்
கண்டுகொள் ளாது கடந்து சென்றார்
சேர்ந்தினி ஆடவர்கள்—மாதர்
சிறுவர் சிறுமியர் பெரியரங்கு
ஏழரை நாழிகையாய்—நாம்
இன்று மழையில் நனைந்து நின்றும்
வாழியர் தமைக்காண—இன்று
வாயாது போயின தென்று சென்றார்

நோண்டிச் சிந்து

வந்தவர்கள் காதகினல்–மறுதினம் மாரியப்பில் வைகி வந்தான் மாரியப்பன், சிந்தை யினிதுவக்கக்–காந்தியடி திரும்பியிந் நகர்வந்து அருள் தருக, கங்கா நதியனையார்–காந்தியடி கட்டளையில் நின்றுரிய இட்டஞ்செய்வோன், சங்கரலிங்க நாடன்–கதர்த்தொண்டு தழைத்து வளம் பெருகி நிலைத்துவாழி சுபம்.

முற்றிற்று.

# காந்திமகான் விருதுநகர் விஜயம்.

செகம்பரவிய புகழும நல்லோர் அகம் நிரம்பிய அருளும் பல கோடி ஜனங்கள் கேட்டானந்திக்கும் இன்சொலும் எம்மாறுதலையும் திருத்தத் தக்க நற்குணமும் அமையப் பெற்ற நம் காந்திமகான் பாரத நாட்டுப் புராதனத்திற்கு மாறுபட்டதாய் இடையில் வந்துள்ள ஜதிகங்களில் ஒன்றாயிருந்துவரும் தீண்டாமையை யொழிக்கத் திருவுளங் கொண்டு பற்பல பாஷைகள் வழங்கி வரப்பெற்ற வட பாரதகண்டம், தென் பாரதகண்டம் ஆகிய நாடுகளில் திக்கு விஜயம் செய்துவார். சென்ற இடங்களில் லட்சக்கணக்காகக் கூடும் ஜனங்களிடை உலக மக்கள் கொண்டு வருவதான சமரச நன்னிலைகளைப் போதித்து, அவரவர்கள் பூரண அன்புடன் தரப் பெறுவதாகிய நன்கொடை காணிக்கைகளை யேற்றுக் கொண்டு, தென் பாண்டி மண்டலத்திற் சிறந்து விளங்கும் விருதுநகரம் வந்தனர். 25—1—34 ஆகிய அன்று தினம் தெரிசனைக்காக ஆண், பெண், சிறுவர், சிறுமியர், முதியர் ஆகிய யாவரும் எல்லையில்லாது வந்து கூடி எதிர்பார்த்திருந்தனர்.

பையனைப் பஃறலைப் பாந்த ளேந்திய
மொய்கிலத்த களியின் முழங்கு நீர்நெயின்
வெய்யவன் விளக்கமா மேருப் பொன்றிரி
மையெடுத் தொத்தது மழைத்த மேகமே.

என்றபடி வானத்தில் மேகந்திரண்டு மழை வருஷித்தன. அதனல் ஜனங்கள் பூர்த்தி பெருதாய்விட்டது. பூர்த்தி பெறுங்காலம் ஒன்றை எதிர்பார்க்கப் படுகின்றன. நன்கொடை காணிக்கைப் பொருள்கள் சமர்ப்பிக்கப்பட்டன. அமைக்கப்பெற்ற மேடையில் நின்று பொழியும் அருள் வாக்கிய மழையை மழைமாரி தடுத்துவிட்டதால், மதுரைமா நகரம் சென்றனர். இந்நிகழ்ச்சியின் ஞாபகார்த்தமாக இந்நூல் இயற்றப்பெற்றதாகும்.

☞ வெ. ஆ. குமரய்ய நாடார்,
பெருநாழி.